விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 7 றஜப் 3 இதழ்: 269
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 20-1-1991

## 14வயதிற்குமேற்பட்டவருக்கு கட்டாய இராணுவ பயிற்சி!
### ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் பிரேரணை

[கொழும்பு]
.4 வயதுக்குமேற்பட்டோருக்கு கட்டாய இராணுவ பயிற்சி அளிக்குமாறு கொழும்பு மாவட்ட சு. கூ எம். பி. திரு ஜினதாஸ நியதபால தனிப்பட்ட பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வர முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

14 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தகுந்தவுடற்கட்டுள

(4-ம் பக்கம் பார்க்க)

## சுயாட்சி வழங்காதவரை இனப்பிரச்னைக்கு தீர்வில்லை

[சென்னை]
இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சுயா

[4ம் பக்கம் பார்க்க]

## ● 26 விமானங்கள், 20 ஹெலிகளுடன்

# அமெரிக்க விமானந்தாங்கி கப்பல் ஈராக்கினுல் மூழ்கடிப்பு!

(பாக்தாத்)

வளைகுடாவில் பெரும் தாக்குதல்களுக்கு தயார் நிலையில் நின்ற அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல்கள் மீது ஈராக் தற்கொலைப் படை நடத்திய திடீர் அதிரடித் தாக்குதலில் 3 விமானந் தாங்கிக் கப்பல்களும் அதிலிருந்த 26 யுத்த விமானங்களும் 20க்கு மேற்பட்ட ஹெலிகொப்டர்களும் அழிக்கப்பட்டதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட கடற்படை வீரர்களும் கொல்லப்பட்டதாக ஈராக் அறிவித்துள்ளது.

★ யுத்தம் தொடங்கிய நாளிலிருந்து நேற்றுவரை அமெரிக்க மற்றும் பன்னாட்டுப் படைகளுக்குச் சொந்தமான 101 விமானங்கள் தமது படை வீரர்களால் சுட்டுவீழ்த்தப் பட்டதாகவும் ஈராக் அறிவித்துள்ளது.

## இஸ்ரேல் மீது மீண்டும் விமான தாக்குதல்

★ இஸ்ரேலில் டெல் அவிவ், ஜெரூசலம் ஆகிய நகரங்களின் மீது நேற்றுக்காலை 10-30 மணியளவில் மீண்டும் ஈராக்கினுல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

★ டெல் அவிவின் மத்திய பகுதியில் இந்த ஏவுகணைகளில் ஒன்று விழுந்து வெடித்ததையால் 12 பேர் படுகாயமடைந்ததுடன் பல வீடுகள் சேதமடைந்தன.

★ இத்தாக்குதலின்போது நச்சுவாயு ஆயுதங்கள் பாவிக்கப்பட்டுள்ளதால் நச்சுவாயு எதிர்ப்பு முகமூடிகள் மக்களுக்கு வழங்கப்பட்டதுடன் காற்றுப் புகமுடியாத பாதுகாப்பான அறைகளில் மக்கள் தங்கவைக்கப்பட்டனர்.

## இஸ்ரேல் பதிலடி கொடுக்கும்

★ இத்தாக்குதலுக்கு இஸ்ரேல் பதில் தாக்குதல் எதுவும் நடத்தவில்லையாயினும் பதில் தாக்குதலை நடத்தப்போவதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. எப்போது, எவ்வாறு பதில் தாக்குதல் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படவில்லை.

★ இஸ்ரேல் தகுந்த நேரத்தில் பதிலடி கொடுக்கும். என்றும் இஸ்ரேல் தன்னை தான் பாதுகாத்துக்கொள்ளப் போராடும், என்றும் அதிபர் ஷமீர் அமெரிக்காவிற்கு தெரிவித்தார்.

## கொர்பச்சேவ் தொடர்பு

★ அமெரிக்க அதிபருடன் சோவியத் ஜனாதிபதி மிகையில் கொர்பச்சேவ் அரைமணி நேரம் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினுர்.

## வெற்றி கிடைக்குமென புஷ் நம்பிக்கை

★ யுத்தம் பற்றி அதிகம் நம்பிக்கைகொள்ள வேண்டாமென்று அமெரிக்கர்களுக்கு அதிபர் புஷ் தெரிவித்தார்.
தகுந்த நேரத்தில் எமக்கு வெற்றி கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## ஜோர்தான் அதிபர் அறிவிப்பு

★ அமெரிக்காவினதும் நேசப்படைகளினதும் இலக்குகளை தாக்குமாறு அரபு நாடுகளை ஜோர்தான் அதிபர் கேட்டுள்ளார்.

★ அமெரிக்க விமானிகள் பலர் உயிருடன் பிடிபட்டுள்ளனர். இவர்களை சர்வதேச பத்திரிகையாளர்களுக்கு ஈராக் காண்பிக்கவுள்ளது.

## ஈராக் மீது தொடர்ந்து தாக்குதல்

★ ஈராக்கை சுற்றி 70 அமெரிக்க யுத்தக்கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளது. 450க்கும் மேற்பட்ட விமானங்களை கொண்ட 6 பாரிய விமானந் தாங்கிய கப்பல்கள் ஈராக்குக்கு மிக அருகில் நிறுத்தப்பட்டு தாக்குதலில் ஈடுபட்டுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

## தள்ளாடிப் பாலத்தில் பயணம் செய்ய தடை

[மாங்குளம்]
மன்னார்ப் பகுதியிலுள்ள தள்ளாடிப் பாலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளபோதிலும் பொதுமக்கள் அவ்வழியாகப் பிரயாணம்செய்யஇராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர். இதனால் பள்ளிமுனைக்கும், திருக்கேதீஸ்வரத்துக்கு மிடையில் படகு மூலமே மக்கள் பிரயாணம் செய்து வருகிறுர்கள்.

## சாந்த் சொரூபியாக காணப்படும் ஹுசைன்

- ஐ. நா. செயலர்

[நியூயோர்க்]
"ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் பரபரப் பேதுமின்றி சாந்த சொரூபியாக காணப்படுகிறுர்! அவரிடம் ஒரு வசீகரத்தை, மந்திரசக்தியை நான் கண்டேன்."

[4-ம் பக்கம் பார்க்க]

## முல்லை. வவுனிக்குளம் உடைப்பெடுக்கும் அபாயம்

[யாழ்ப்பாணம்]
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளம் கடந்த 3 தினங்களாகப் பெய்த அடைமழையினுல் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகியமாவட்டங்களில் பெய்த மழையின் காரணமாக பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. (153)

## முல்லை மாவட்டத்திற்கு 23 லொறிகளில் உணவு

(யாழ்ப்பாணம்)
முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தரைமார்க்கமாக 23 லொறிகளில் உணவுப் பொருட்கள்அநுராதபுரத்திலிருந்து சர்வதேச செஞ்சிலுவை சங்க செயற்குழு பிரதிநிதிகளின் பாதுகாப்பில் அனுப்பப்படவிருக்கிறது.
இம்மாதம் 22ம் திகதி செல்

[4-ம் பக்கம் பார்க்க]

## 23ல் கப்பல் வரும்

(யாழ்ப்பாணம்)
லங்காசிறி கப்பல் இம்மாதம் 23ந் திகதியளவில் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரவுள்ளது.

## வரி விளம்பரம்

### தேவை

நெல்லி விதைகள் தேவை: மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ-998)

### விற்பனைக்கு

தரமான வேப்பெண்ணெய் விளக்கெரிக்க கண்குளிர்ச்சிக்கு. நுளம்புத் தொல்லையில் இருந்து விடுதலை. போத்தல் ரூபா 80/- மட்டுமே. திருநெல்வேலி, இணுவில், யாழ். மாதிரிச் சந்தை அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ-997)

### கல்வி

கணிதம் O/L ஏப்ரல், டிசம்பர் பரீட்சைகளில் விசேட சித்தி, அதி விசேட சித்தி பெறுவதற்கு பரீட்சை தாள்கள் சென்ற 15வருடங்களாகத் திருத்திய பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (சி-4269)

### தரன் ஸ்ருடியோ

கறுப்பு வெள்ளை படங்கள் என்லாட்ஜ்மென் படங்கள், றபர் சீல், பிளாஸ்ரிக் போட், விளம்பர போட் மற்றும் ஓவிய வேலைகள் 24, யாழ். வீதி, (ரெட்ணு வீதி), யாழ்ப்பாணம். (சி 4274)

### பரிசு தரும் 'அக்கினி'

மீரா வெளியீடான செங்கை ஆழியானின் 'அக்கினி' நாவலை வாங்கியவர்கள் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பனை மாசி 28க்குள் நிரப்பி அனுப்புங்கள். குலுக்கலில் தெரிவு செய்யப்படும் முதல் பத்து வாசகர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 400/- ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்படும். (சி 4271)


## மருது இலவசம்

(யாழ்ப்பாணம்)

அடுப்புக்கு விறகு, வெயிலுக்கு நிழல், நீர் நிலைகளுக்கும் ஆலய வீதிகளுக்கும் குளிர்ச்சி தரும் மருதங் கன்றுகளை மில்க்வைற் நிறுவனத்திலிருந்து நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

## கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள மயானங்கள், சேமக்காலைகள் யாவற்றையும் மேலைநாடுகள் போன்று புனிதமாகவும், துப்புரவாகவும் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இளைப்பாறிய கிராம சேவையாளர் திரு.யோ. அருளானந்தம் இது சம்பந்தமான மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

# போத்தல்களில் எரிபொருள் விற்பனைக்குத் தடை

(கொழும்பு)

எரிபொருட்களை போத்தல்களிலும் கொள்கலன்களிலும் விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படியான விற்பனைக்கு ஊக்கமளிக்கும் எரிபொருள் நிலையத்தின் அனுமதிப்பத்திரம் ரத்து செய்யப்படும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே எரிபொருளை போத்தலில் விற்பனை செய்வதற்காக ஒருவரின் அனுமதிப்பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளது!

# "கல்விகற்க விரும்பும் மாணவருக்கு ஊக்கமளிப்பது அவசியம்"

(நல்லூர்)

"யாழ். இந்துக் கல்லூரி கலை நிமிர்ந்து நிற்கக் கூடிய நிறுவனமாக இன்றுள்ளது."

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

"கடந்த வன்செயல் காலத்தில் அக்டோபர் மாதமளவில் யாழ்ப்பாணத்தில் அறுபது பிள்ளைகள்தான் பாடசாலைக்குச் சமுகமளித்திருந்தார்கள். நேற்று ஆயிரக் கணக்கான மாணவர்கள் தங்கள் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டும் என்று ஊர்வலம் வந்தார்கள். கல்விகற்கும் மாணவர்களுக்கு ஊக்கமளிப்பது அவசியம். என்னால் இயன்றளவு ஊக்கமளித்துச் செயல்படுவேன்" என்றார்.

மேற்படி கல்லூரி நூற்றாண்டு விழா ஆரம்ப தினம் காலை வண்ணை சிவன் கோவிலில் பூசையுடன் ஆரம்பமானது.

யாழ் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா கட்டிட அத்திபார மங்களப் பொருள்கள் வண்ணை சிவன்கோவிலிலிருந்து மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்களால் ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டது.

## புதிய நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டி தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தின் புதிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: கோபால் துரைசிங்கம், உப-தலைவர்: க. அரியரத்தினம், செயலாளர்: செல்வன் க. வாசு, உப செயலாளர்: இராசதுரை, பொருளாளர்: செல்வன் சி. சிவராசா, ஏழுபேர் கமிட்டி உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். [க]


## அஞ்சலி

எமது கல்லூரியின் பழைய மாணவரும், நீண்டகால ஆசிரியரும், அண்மையில் ஓய்வுபெற்ற பிரதி அதிபருமாகிய,

**பொன். மகேந்திரன் அவர்களின்**

திடீர் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
20-01-91. (ஏ-999)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் பொன். மகேந்திரன்

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், ஆசிரியரும், பதில் அதிபருமாக இருந்த காலஞ்சென்ற

அமரர் பொன். மகேந்திரன்
அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலி

**ஸ்ரீ தாமோதர விலாஸ் சைவ உணவகம்,**
239, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (ஏ-996)

## A|L 90, O|L 90 (தடைப்பட்ட பரீட்சை)

### மீட்டல், வினா-விடை வகுப்புகள்

அநேக மாணவர்கள் கோரியதற்கிணங்க

A/L விஞ்ஞான பாடங்கள்-Day Class
O/L சகல பாடங்களும் - மாலை வகுப்புகளாகவும் நடாத்தப்படும்.

★ மாதாந்தப் பரீட்சைகள் நடாத்தப்படும்.

★ இறுதி — பயிற்சிப் பரீட்சையில் எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.

ஆரம்பம்: 23-01-91

**BOND INSTITUTES**
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ 1000)


## யாழ். பல்கலைக்கழகம் இலங்கை

## எரிபொருள் விநியோக கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் பின்வரும் அளவு எரிபொருள் கொள்கலனில் விநியோகிப்பதற்கு தகுதிவாய்ந்த விநியோகத்தர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1) சாதாரண டீசல் வாராந்தம் 300 லீற்றர் அல்லது மொத்தம் 3000 லீற்றர்.
2) SAE 40 ரக என்ஜின் ஒயில் வாராந்தம் 5 லீற்றர் அல்லது மொத்தம் 50 லீற்றர்.
3) மண்ணெய் வாராந்தம் 200 லீற்றர் அல்லது மொத்தம் 2000 லீற்றர்.

வாராந்தக் கூறுவிலைகள் 30-04-1991 வரை ஏற்புடையதாக இருத்தல் விரும்பத்தக்கது. ஆனால் கூறுதாரர்கள் விரும்பினால் எந்தக்கால எல்லைவரை இந்தக் கூறுவிலைகள் ஏற்புடையன எனக் குறிப்பிடலாம்.

விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தரக்கட்டுப்பாட்டுக்கு அமைவாக இருக்கவேண்டும்.

கூறுவிலைகள் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 5000/- பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டுடன், 28-01-91 காலை 10-00 மணிக்கு முன் பல்கலைக்கழக பணியாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் பல்கலைக்கழக நிதியாளருடன் தொடர்புகொள்ளவும்.

யாழ். பல்கலைக்கழக கேள்விச்சபையின் முடிவே இறுதியானதாகும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1991-01-18. (ஏ-995)

## தமிழ்நாட்டில் பதவிப் போட்டி

தொன்று தொட்டு நிலவிவந்த பந்தபாசத்தில் சொந்தம் கொண்டாடி, தமிழகத்தினுள் தஞ்சம் புகுந்த ஈழத் தமிழ் அகதிகளையும், போராளிகளையும் தமிழக அரசும் அதன் எதிரணிக் கட்சிகளும் பதவிப் போட்டிக்காகப் பந்தாடி வருகின்றனர்.

இந்திய மத்திய அரசின் சந்தர்ப்பவாத அரசியல் அணுகுமுறை என்ற தலை ஆட்டத்துக்கு -தமிழக வால் ஆடாமல் ஆடுகிறது! அந்த வாலையே ஒட்ட நறுக்கிவிட எதிர்க் கட்சிகள் படாதபாடு படுகின்றன!

கட்சி விட்டுக் கட்சித் தாவல், பதவி கவிழ்ப்பு, அரசுக் கலைப்பு, சபை வெளி நடப்பு ஆகிய அனைத்துக் குறுக்குவழி எதிர்ப்பு அலைகளை மோத விட்டு ஆதாயம் தேடுவதில், தமிழக அரசியல் வாதிகள் அசகாயசூரர்!

இத்தகைய எதிர்ப்பு அலை ஒன்று, நேற்று முன் தினம் தமிழக மாநில சட்டசபையின் ஆளுநர் உரையின்போது வீசியுள்ளது!

விடுதலைப் புலிகள் குறித்து, மத்திய அரசின் இரகசியத் தகவல்களைத் தமிழக மாநில அரசு, யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியதாகவும் இதன் மூலம் கலைஞர் கருணாநிதியின் தமிழக அரசு தேச விரோதக் குற்றம் இழைத்துவிட்டது என்றும், எனவே இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டும் என்று கோரி, இந்திரா காங்கிரஸ் கட்சியும், ஜெயலலிதா அ. இ. அ. தி. மு. க. கட்சியும் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்துள்ளன.

இதேவேளையில், தமிழக அரசின் அதிகாரிகளினால் விடுதலைப் புலிகள் தொல்லைப்படுத்தப் படுகிறார்கள் என்று தி.மு.க. அரசு மீது குற்றஞ்சாட்டி அ.அ. தி. மு.கவிலிருந்து பிரிந்து சென்ற அணியின் தலைவரான திரு. எஸ். திருநாவுக்கரசுவும் வெளிநடப்புச் செய்துள்ளார்!

சொந்தம் கொண்டாடித் தமிழகத்துக்கு ஓடோடிச் சென்ற ஈழத் தமிழ் அகதிகள், முகாம்களிலும், வைத்தியசாலைகளிலும், சிறைச்சாலைகளிலும் தற்போது அதிவிசேட முகாம்களிலும் பராமரிக்கப்படுகின்ற முறைகளை நோக்கும் போது, தமிழக அரசியல் பதவிப் போட்டிகளுக்கு ஈழத் தமிழர்கள்தானா பகடைக்காய்கள் ஆவது என்ற கேள்வி எழுகிறது!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தில், தரமான அரசியல் பாரம்பரியத்தை உருவாக்கும் எண்ணத்துடன், அறிஞர் அண்ணா தலைமையில், ஆட்சி பீடம் ஏறிய தி. மு. கழகம், கடந்த 33 ஆண்டுக் காலத்திற்குள் பதவிப் போட்டி காரணமாகப் பல கட்சிகளாகப் பிளவுபட்டு, சின்னாபின்னமாகி, தரக்குறைவான அரசியல் நாடகமாடி, ஈழத் தமிழர் போராட்டத்துக்கே, மாசு கற்பிப்பது வேதனைக்கு உரியது!

— மயூரன்

# தரைப்பகுதியில் ஈராக்கின் படைபலம் சக்திவாய்ந்தது!

வளைகுடா யுத்தத்தில் ஆகாய தாக்குதலில் அமெரிக்க நேசநாட்டுப் படைகளின் பலம் மிக அதிகளவு இருந்தாலும் தரைப் பகுதியில் ஈராக்கின் படைபலம் மிக சக்திவாய்ந்ததாக இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

வான் வழி தாக்குதல்கள் முடிவடைந்து தரைமூலம் அமெரிக்க நேசப்படைகள் முன்னேறும்போதுதான் உண்மையான யுத்தமே ஆரம்பமாகுமென்று தெரிவிக்கப்படுகிறது.

### தற்கொலைப் படைகள்

ஈராக்கின் லட்சக்கணக்கான படைவீரர்கள் பலத்த எதிர்ப்பை அதிகளவு நாட்களுக்கு கொடுப்பார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிய தற்கொலை படைகளும் இந்த அணியில் பெருமளவு அடங்கியுள்ளன.

இதற்கிடையில் மே. ஆபிரிக்க நாடான மொறரேனியாவில் அதிபர் ஹுசைனின் குடும்பத்தினர் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதை அந் நாட்டு அரசு மறுத்துள்ளது. அதிபர் ஹுசைனின் மனைவி ஷதீனு 2 மகள் 3 மகன் உட்பட சில முக்கிய அதிகாரிகள் சிறிய பயணிகள் விமானம் மூலம் 2 யுத்த விமான பாதுகாப்புடன் மொறரேனியாவில் சென்றடைந்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

குவைத்திலிருந்து உடனடியாக வெளியேறி அப்பாவி மக்கள் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாவதைத் தடுக்குமாறு சோவியத் அதிபர் ஈராக் அதிபருக்கு அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

### சோவியத் கப்பல்கள்

இதற்கிடையில் வளைகுடாவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 3 யுத்தக் கப்பல்களை சோவியத் அங்கிருந்து உடனடியாக வாபஸ் பெற்றுள்ளது. ஈராக் மீதான தாக்குதலைக் கண்டித்து சோவியத்தில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுவருகிறது.

உலக நாடுகளிலுள்ள முஸ்லிம் மதத்தலைவர்கள் நூற்றுக்கணக்கானோர் ஈராக் மீதான அகோர விமான தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு ஐ. நா. செயலருக்கும் அமெரிக்க அதிபருக்கும் அவசர செய்திகளை அனுப்பியுள்ளனர்.

### ஐ. நா. செயலர் கவலை

கடந்த 3 நாள் யுத்தம் குறித்து ஐ. நா. செயலருக்கு அமெரிக்கா சகல தகவல்களையும் உடனுக்குடன் அனுப்பி வருகிறது. சகல தகவல்களையும் ஐ. நா. செயலர் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் தவிர்க்க முடியாத இந்த யுத்தம் குறித்து அவர் பெரிதும் கவலையடைந்துள்ளதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### ஒன்பது பேர் மரணம்

இஸ்ரேல் மீது நடாத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலின் போது அதிர்ச்சியாலும், மாரடைப்பாலும் விஷவாயுமுகமூடி இறுக்கத்தால் திணறியும் 9 பேர் மரணமடைந்தனர். மேலும் ஏவுகணை தாக்குதல் இடம் பெறலாமென்னும் அச்சத்தில் டெல் அவிவில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றப்படுகிறார்கள்.

யுத்தத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கவும் தாக்குதல் பிரிவில் சேர்ந்து கொள்ளவுமென பிரிட்டனின் மேலதிக 2 படைப்பிரிவு வளைகுடாவை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது.

### அபாய சங்கு ஒலி

இஸ்ரேல் மீது ஒருதடவையே ஏவுகணை தாக்குதல் நடாத்தப்பட்டாலும் இஸ்ரேலில் தொடர்ந்து அபாயச் சங்கு ஒலித்தவண்ணம் உள்ளது. முப்படைகளும் உத்தரவிற்காக காத்திருப்பதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் மீது தொடர்ந்தும் ஏவுகணை தாக்குதலை நடாத்தி இஸ்ரேலை போருக்குள் இழுப்பதன் மூலம் அமெரிக்காவிற்கு பெரும் நெருக்கடியை கொடுக்க ஈராக் முயன்று வருகிறது.

அமெரிக்கா, பிரிட்டனிலுள்ள ஈராக்கியர் மீது பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அவ்வப்போது பொலிஸாருக்கு தகவல் தரவேண்டுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

### 25 ஏவுகணை தளங்கள் அழிப்பு

இதுவரை நடந்த யுத்தத்தில் அமெரிக்கா, நேசப்படைகளுக்கு பெரும் வெற்றி ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இதுவரை 25 ஈராக்கிய ஏவுகணை தளங்களும் 80 க்கும் மேற்பட்ட விமானங்களும் அணு ஆலைகள், இரசாயண ஆயுத ஆலைகள் (பெருமளவு முற்றாக) அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த யுத்தத்தில் அமெரிக்க விமானங்கள் 4 வீழ்த்தப்பட்டு அல்லது காணாமல் போயும் 7 விமானிகள் கொல்லப்பட்டு அல்லது காணாமல் போயும் 6 கடற்படையினர் கொல்லப்பட்டுமுள்ளதாக அறிவித்துள்ளது.

இஸ்ரேல் மீதான தாக்குதல் வளைகுடாவில் அரபு நாடுகளிடையேயும் பெரும் ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ளது பல நாடுகளில் தொடர்ந்து அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வலுத்து வருகிறது.

### அணிசேரா நாடுகள் முயற்சி

யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவர அணிசேரா நாடுகள் முயன்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்க, சோவியத், பிரிட்டன், ஈராக் அதிபர்களுடனும் ஐ. நா. செயலாளருடனும் அணிசேரா அமைப்பு அவசர தொடர்புகளை மேற்கொண்டுள்ளது.

### அரசியல் தீர்வுக்கு சோவியத் முயற்சி

வளைகுடா பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண சோவியத் யூனியன் தீவிரமாக செயற்பட்டுவருகிறது. போரை உடனடியாக நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு கொர்பச்சேவ் கோரியுள்ளார். ஐ.நா. செயலருடனும் தொடர்பு கொண்டுள்ளார்.

ஈராக் சரணடைந்து குவைத்தைவிட்டு வெளியேறும்வரை பன்னாட்டு படையினரும் தாக்குதல் தொடருமென்று அமெரிக்க இராணுவ தளபதி ஒருவர் நேற்று தெரிவித்துள்ளார். [கி]

## விநியோகிக்கப்படாத யாழ். நகர் கடிதங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம்பெரியகடைப் பகுதிக்குரிய அநேக சாதாரண கடிதங்கள் யாழ். பிரதம தபாலகத்தில் விநியோகம் செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன.

கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதப்பகுதியில் பெறப்பட்ட கடிதங்களும் இவற்றுள் அடங்கும்.

இக்கடிதத்திற்குரியவர்கள் யாழ். பிரதம தபாலகத்தில் வேலை நாட்களில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

## இராசிபலன்

(20-01-91) ஞாயிற்றுக்கிழமை

மேடம்; அவமதிப்பு, தொழில் பாதிப்பு, மனக் குழப்பம்.

இடபம்: தொழில் லாபம், குடும்ப சுகம். பயணம்.

மிதுனம்: தொழில் மாற்றம், காரிய சித்தி, குடும்ப பகை.

கடகம்: அஷ்ட வாய்ப்பின்மை, கடும் சினம், அலைச்சல்.

சிங்கம்: சிறு விபத்து குடும்ப பிரிவு. அவமதிப்பு.

கன்னி: பணவரவு, சுப காரிய செலவு, குடும்பசுகம்.

துலாம்: அந்நியர் உதவி, புதியபதவி, விருந்துபசாரம்.

விருச்சிகம்; பொருள் விரயம், மனஸ்தாபம், கடவுள் பக்தி.

தனுசு: பகைவர் தொல்லை வாக்குவாதம், தொழில் கஷ்டம்.

மகரம்: சளித்தொல்லை, விடாமுயற்சி, காரியதடை.

கும்பம்:- கெடுபிடி, வாக்கு கலகம், பெரியோர்பகை.

மீனம்: பணப்புழக்கம், செல்வாக்கு தொழில்முயற்சி.

'ஜோஸ்யர்'

## புலிகளின் வெளியீடுகள் மக்களை சென்றடைவதற்கு நூலகங்கள் உதவுகின்றன!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளினால் வெளியிடப்படும் நூல்கள் மக்களைச் சென்றடைவதில் நூலகங்கள் பெரும் பங்களிப்புச் செய்கின்றன என்று தென்மராட்சி வட்ட அவைப் பொறுப்பாளர் திரு. எஸ். செல்வராசா தெரிவித்தார்.

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தில் புனரமைப்புச் செய்யப்பட்ட நூலகத்தினைத் திறந்து வைத்துப் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

செல்வி த. மாலினி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. செல்வராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இன்றைய போராட்டச் சூழலில் புலிகளின் சகல வெளியீடுகளும் மக்கள் மத்தியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்பதனை அவதானிக்கக்கூடியதாக இருப்பதுடன் இதனால் பலரிடம் வாசிக்கும் பழக்கமும் ஏற்பட்டுவருகிறது."

## கிளிநொச்சியில் மலேரியா

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்படும் மலேரியா நோயிலிருந்துமூளைக்காய்ச்சல் நோய் அபாயம் தோன்றியுள்ளது. மூன்று மாதத்திற்கு ஒரு தடவை மலத்தியோன் தெளிக்கப்பட்டுவந்தது தற்போது 6மாதமாகியும் மலத்தியோன் மருந்து இல்லாமையினால் தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக இப்பிரதேசத்தில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து வருகின்றது. (2)

# வளைகுடாவில் யுத்த நிறுத்தம் கொண்டுவர ரஷ்யா முயற்சி

[மாஸ்கோ]

வளைகுடாவில் யுத்தநிறுத்தம் ஒன்றைஏற்படுத்த சோவியத் யூனியன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக ஐ நா. சபையில் தீர்மானமொன்று கொண்டுவரப்படவுள்ளது;

இதேவேளை ஈராக் ஜனாதிபதி திரு. சதாம் ஹுசைனுக்கு சோவியத் அதிபர் திரு. மிகைல் கொர்ப்பசேவ் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்;

குவைத்திலிருந்து ஈராக்கை விலகிக்கொள்ளுமாறும் பிரச்சனைகளுக்கு கலந்துரையாடல் மூலம் தீர்வு காண்பதற்கு தான் மத்தியஸ்தம் வகிக்க தயாராக இருப்பதாகவும் திரு. கொர்ப்பசேவ் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## 26 விமானங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

★ இரசாயன ஆயுதங்களை ஈராக் பயன்படுத்தப்போவதாக அறிவித்ததையடுத்து இதுவரை 60 லட்சம் இஸ்ரேலியர்களுக்கு விஷ வாயு பாதுகாப்பு முகமூடிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ இஸ்ரேல் இம்முறை சண்டையில் இறங்கினால் அது அதன் 6வது யுத்தமாக இருக்கும் இஸ்ரேல் இதுவரை தனது எல்லைக்குள் எதிரிகளை சந்திக்கவில்லை.

★ ஈராக் ரசாயன நச்சுவாயு ஏவுகணைகளை பாவித்தால் பதிலாக அணு ஆயுதங்களையோ, ரசாயன ஆயுதங்களையோ பாவிப்பது பற்றி பரிசீலிக்கப்படுமென அமெரிக்கா அறிவித்துள்ளது;

## ஈராக் - சிரியா இணைவு

★ இஸ்ரேலை ஈராக் தாக்கியதன் மூலம் 20 வருட பகை நாடுகளான ஈராக்-சிரியா இணைந்துள்ளன.

★ இதுவரை 25க்கும் மேற்பட்ட ஈராக்கிய ஏவுகணை தளங்கள் அழிக்கப்பட்டு விட்டன;

★ பாக்தாத் நகரம் பூகம்பத்தால் அழிந்த பிரதேசமாக தென்படுவதாக அங்கிருக்கும் பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## 500 விமானங்கள் குண்டுமாரி

★ நேற்றுக் காலை 6 மணி வரை ஈராக்கில் 4 நகரங்கள் மீது 6000 க்கும் மேற்பட்ட தடவை 180 இலக்குகளை நோக்கி 500 விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளன.

## 7.5 பில்லியன் நிதியுதவி

★ ஐரோப்பிய சமூகம் அகதிகளுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்குமென 7.5 பில்லியன் டாலர் நிதி உதவியை வழங்கியுள்ளது;

## மக்கள் வெளியேற்றம்

★ ஈராக் குவைத்திலிருந்து ஜோர்தான் எல்லையூடாக ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறுகின்றனர்.

★ அமெரிக்க, பிரிட்டிஷ் பத்திரிகைகள் விசேட செய்திப் பதிப்புகளை மயிர்க்கூச்செறியும் விதத்தில் படங்களுடன் பிரசுரித்திருந்தன.

★ இஸ்ரேலைத் தாக்கவென 800க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் ஈராக்கில் தயார் நிலையில் உள்ளன.

## தற்கொலைப் படை தயார் நிலையில்

★ ஈராக்குக்கு ஆதரவாக அரபு நாடுகளிலும், முஸ்லிம் நாடுகளிலும் ஆயிரக்கணக்கான தொண்டர் படைகள் தயாராகி வருகின்றன,

★ பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் 6000 பேர் தற்கொலைப் படையாக ஈராக்கிற்கு. ஆதரவாகப் போரிடத் தயார் நிலையில் உள்ளனர்.

★ வளைகுடாப் பகுதிக்கு மேலதிக அமெரிக்கப் படைகளை அனுப்ப அதிபர் புஷ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

★ இந்த யுத்தத்தில் ஈராக்கிற்குப் பெரும் வெற்றி கிடைக்குமென சதாம் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

## ஐ. நா. செயலர் கோரிக்கை

★ வளைகுடாப் பிரச்சனையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரச் சோவியத் யூனியன் முழு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென ஐ. நா. சபைச் செயலர் அவசரவேண்டுகோள் விடுத்துள்ளார்-

## தொடர்ந்து விமானத் தாக்குதல்

★ ஈராக் மீது தொடர்ச்சியாக இரவு பகல் பயங்கர விமானத் தாக்குதல் இடம் பெற்றுவருகிறது இது ஒரு "காப்பெற்" தாக்குதல் என வர்ணிக்கப்பட்டுள்ளது,

## 196 ஏவுகணைகள் அழிப்பு

★ ஈராக்கின் 196 ஏவுகணைகள் தாக்கி அழிக்கப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

★ அமெரிக்க நேசப்படைகளது நூற்றுக்கும் மேற்பட்ட ஏவுகணைகள் ஈராக்கினால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது-

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

சின்ன உப்பவம் பகுதியை நோக்கி நான்கு தடவைகள் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. (வி)

## சுயாட்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ட்சி வழங்காதவரையில் இனப் பிரச்சனைக்கு தீர்வு எதுவும் கிடையாது என இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன் தெரிவித்தார்.

'வோல்ட் வோச்' சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்; (மா)

# இலட்சக்கணக்கில் சவூதிமக்கள் மடிவர்

### ஹுசைன் எச்சரிக்கை

(பாக்தாத்)

வளைகுடாப் போரில் லட்சக்கணக்கான சவுதி அரேபியர்கள் மடிவார்கள் எனச் சவுதி மன்னர் பஹத்திற்கு ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாக்தாத் வானொலி மூலம் விடுத்துள்ள இந்த எச்சரிக்கையில் 'உலகப்போர் ஒன்றுக்குத் தள்ளப்படுவதற்கான அதிகாரத்தை யார் உங்களுக்குக் கொடுத்தார்கள்? இந்தப் போரில் லட்சக்கணக்கான சவுதி அரேபியர்கள் மடிவார்கள் என்பதை அறிவீர்களா? என்றும் கேள்வி எழுப்பினார்.

## 14 வயதிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கும் கட்டாய இராணுவ பயிற்சி அளிப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கையெடுக்கவேண்டுமென அப்பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [63]

## சாந்த சொருபியாக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐ. நா. செயலர் ஜாவியர் பெரஸ் டி குயிலர் இவ்வாறு தெரிவித்தார்.

சதாமுடன் பேச்சுக்கள் தோல்வியடைந்தபின் திரும்பியதும், ஐ. நா. செயலர் 'சாந்தசொருபியான மனிதரைத்தான் நான் ஈராக் ஜனாதிபதியில் கண்டேன். அது ஒரு உளவியல் ரீதியான சாந்தம் என்றே நான் உணர்கின்றேன். மிகவும் பண்பட்டவராக, அன்பாதரவுடனும், முன் கவனத்துடன் செயற்படுபவராகவும், விடயங்களைத் தெளிவாக எடுத்தியம்புபவராகவும் அவர் இருக்கிறார் என்றார்.

நிதான புத்தியுள்ளவராகவும், விவேகியாகவும் அவர் இருக்கிறார் என்று மேலும் கூறினார்.

## பி.பி.ஸி.ஒலிபரப்பு

[கொழும்பு]

வளைகுடா யுத்த செய்திகளை ஒலிபரப்பும்பொருட்டு லண்டன் பி. பி. ஸி. ஒலிபரப்பு இன்று இரவு 9-30 முதல் 9-45 வரை ஒலிபரப்பப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [எஸ்]

## ஆசிரியர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

அறவழிப் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான சந்திப்பு இன்று காலை மேற்படி பணிமனையில் நடைபெறவுள்ளது;

அறவழித் தலைவர் திரு. கே. கோபாலகிருஷ்ணன் தலைமையில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

## முல்லை மாவட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாய்க்கிழமை மேற்படி லொறிகள் அநுராதபுரத்திலிருந்து உணவுப் பொருட்களுடன் முல்லைத்தீவு நோக்கிப் புறப்படவிருக்கிறது. (153)

## மரண அறிவித்தல்

### சரோஜினிதேவி கிருஷ்ணசாமி

சரோஜினிதேவி கிருஷ்ணசாமி 16-01-91 அன்று சிவபதமடைந்தார். இவர், புங்குடுதீவு பொன்னுத்தோட்டம் 10-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது 854-ம் இலக்கம், கே. கே எஸ். வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், திரு. த. கிருஷ்ணசாமியின் [பிரபல வர்த்தகர், கொழும்பு] பாசமிகு அன்பு மனைவியும், செல்வன் சிவகுமார் [லண்டன்], செல்வன் ஜீவகுமார் [கனடா], செல்வன் விஜயகுமார் [லண்டன்], செல்வன் ரூபகுமார் [யாழ். இந்துக்கல்லூரி], செல்விகள்: நவாயினி, நிலாயினி, சங்கீதா [யாழ். இந்து மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. கு. ஆறுமுகம் காலஞ்சென்ற பூரணம் தம்பதிகளின் அருந்தவப்புதல்வியும், காலஞ்சென்ற திரு. தம்பிப்பிள்ளை பராசக்தி தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற திரு. அ. துரைச்சாமி [விஜயா ரேடிங் கொம்பனி, கொழும்பு], திரு. ஆ. கனகலிங்கம் [சுகந்தா ரேடர், கொழும்பு], திரு. ஆ. விஜயரட்ணம் [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. த. தர்மலிங்கம் [இளைப்பாறிய தபாலக உத்தியோகத்தர்], காலஞ்சென்ற திருமதி க. சுப்பையா சிவகாமிப்பிள்ளையின் அருமை மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை [20-01-91] காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இறுதிக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்:

த. கிருஷ்ணசாமி

854, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

[சி 4278]